## இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

பௌதீகரீதியாகக் காணப்படாத ரூபா 985,925 தொகையான 07 சொத்து விடயங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

ரூபா 652,775 கூட்டுத்தொகையான 13 நடைமுறைச் சொத்து மீதிகள் மற்றும் ரூபா 239,784 கூட்டுத்தொகையான 05 நடைமுறைப் பொறுப்பு மீதிகள் என்பன 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக முன் கொண்டுவரப்பட்டிருந்தன.

#### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | கடன் நிவராண சபை நிதியம் | 130,328 | விபரமான பட்டோலைகள், மீதிகளை உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | 6 முற்பணக் கணக்கு களுக்குரிய மீதிகள் | 287,379 | விளக்கமளித்தல் குறிப்புக்கள் |
| (இ) | இறப்பர் வியாபார பதிவேட்டு இருப்பு | 6,360 | இருப்பு பதிவேடு |
| (ஈ) | செலுத்த வேண்டிய முற்பணங்கள் | 22,031 | விபரமான பட்டோலை, மீதிகளை உறுதிப்படுத்தல்கள் |
| (உ) | ஏனைய நடைமுறை பொறுப்புக்கள் | 17,753 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 463,652 மிகையைக் காண்பித்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 275,280 ஆனமையால் நிதி விளைவுகளில் மிகையில் அதிகரிப்பு ரூபா 188,372 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதியத்தின் மொத்த வருமானமானது நிலையான வைப்பு வட்டி வருமானத்தினையும் சேமிப்பு வட்டி வருமானத்தினையும் மாத்திரம் உள்ளடக்கியிருந்ததுடன் அவை முறையே ரூபா 347,199 மற்றும் ரூபா 147,686 ஆக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்கால நிலைமை

செயற்படும் நிலையில் காணப்படாத இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தை கலைக்கும் வகையில் உரிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கணக்கறிக்கையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்த்து அதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டைப் பெறவேண்டுமென பொது நிதித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ளப்படாமையினால் மீளாய்வாண்டிற்காக பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதி